நல்லதைச் செய்வோம்!
நாடகத்தில் செய்வோம்!

உலக நாடக நிறுவனம் (ITI)
நிகழ்த்துக் கலைக்கான உலக அமைப்பு
உலக நாடக நாள், 2023-27 மார்ச்
' உலக நாடக நாள்' செய்தியை வழங்குபவர்:
எகிப்து நாட்டு நடிகை சமிஹா ஐயூப் (Samiha AYOUB)

---

ஆழிசூழ் உலகெங்கும் பரந்திருக்கிற, என் நட்புகளான நாடகக் கலைஞர்கள் அனைவருக்கும்-

உலக நாடக நாளுக்காக நான் இந்தச் செய்தியை எழுதுகிறேன். அதைவிடவும், இன்றைய உலக நிலைமைகளுக்கு நடுவில், நாடகம் மற்றும் நாடகம் அல்லாத கலைஞர்கள் அனைவருமே ஆட்படு கின்ற துயரச் சுமைகளின் அடியில், என் இருத்தலின் ஒவ்வொரு இழையும், அழுத்தங்களில் அரை பட்டும், கலவை உணர்வுகளில் சிக்குண்டும் நடுக்குறுகின்றது என்கிற என் உணர்வை, உங்களி டம் இப்பொழுது பகிர்ந்து கொள்வதில், நான், பெருமகிழ்வு கொள்கிறேன். நம் உலகு இன்றைக்கு எதிர்கொண்டிருக்கிற சிக்கலான முரண்பாடுகள், போர்கள், இயற்கைப் பேரழிவுகள் ஆகியவை, நம்முடைய பொருளாதய உலகை மட்டுமின்றி, நம்முடைய ஆன்மீக உலகையும், நம்முடைய மன அமைதியையும் குலைத்திருக்கிற பாதிப்புகளிலிருந்து, நாம் பெற்றிருக்கிற நேரிடை விளைபயனா னது, உறுதியற்ற நிலையின்மையேயாகும்.

இன்று உங்களிடம் இதைப் பகிர்ந்துகொண்டிருக்கிற இந்தப் பொழுதில், முழு உலகமும் தனித்து விடப்பட்ட ஒரு தீவாய் இருக்கிறது என்பதாக, அல்லது மூடுபனி சூழ்ந்த அடிவானம் நோக்கிப் பயணப்படுகிற கப்பல்களைப்போல் நாம் பயணப்பட்டுக் கொண்டிருப்பதாக, வழிகாட்டும் எந்தத் தலைமையுமின்றி, ஆர்ப்பரிக்கும் ஆழ்கடலுக்கு நடுவில்,கரையென்று எதையுமே கண்ணால் காண முடியாதிருக்கிற இந்தச் சூழலிலும், ஒவ்வொருவரும் கப்பலைச் செலுத்தியபடி, நீண்ட அலைவுதிரி வுக்குப் பின், பாதுகாப்பான துறையொன்று கண்ணில்படும் எனும் நம்பிக்கையில் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருப்பதாய் நான் உணர்கிறேன்.

நம் உலகு, இப்பொழுதுள்ளதைப்போல் இவ்வளவு நெருக்கமாக எப்பொழுதும் இணைக்கப்பட்டி ருந்ததில்லை. அதேநேரம், இப்போதுள்ளதைப்போல் அத்தனைக் கரடுமுரடானதாகவும், ஒவ்வொ ருவரிடமிருந்தும் மிக நீண்ட தொலைவு தனித்து விலகியிருப்பதாகவும் எப்பொழுதும் இருந்ததி ல்லை. சமகால உலகம் நம்மீது திணித்திருப்பது, இதற்குள் நிலைகொண்டிருக்கிற இந்த நாடக முர ணைத்தான்! செய்திகள் மற்றும் நவீனத் தகவல் தொடர்புகள், எல்லாவகைத் தடைகளையும் தகர் த்து, புவி எல்லைகளைச் சுருக்கி ஒருங்குகூடியிருப்பதற்கு நாம் அனைவருமே சாட்சியாக இருந்து வந்தபோதும், புறத்தே மேலீடாகத் தோன்றுகிற இக் கூடுகைகளுக்கு நடுவில், தர்க்க

உள்ளுணர்வு களுக்கு அப்பாற்பட்டு, உலகம், முரண்பாடுகளுக்கும் பதட்டங்களுக்கும் சாட்சியாகவே இருந்து கொண்டிருக்கிறது. மனிதகுலம், தனக்கான எளிய குணமாய்க் கருதுகிற உண்மையின் சாரத்திலிரு ந்து, நம்மைத் தொலைதூரத்திற்கு நகர்த்திச் சென்று, அடிப்படை வேறுபாடுகளை நம்மிடம் உரு வாக்கியிருக்கிறது.

நாடகம் என்பது, அதன் உண்மைப் பொருளில், மனிதகுலத்தின் உண்மைச் சாரமாயிருக்கிற வாழ் க்கையை அடிநாதமாய்க் கொண்டிருக்கிற ஒரு தூய மனிதச் செயற்பாடாகும். பெரும் நாடக முன் னோடி கான்ஸ்டாண்டின் ஸ்டானிஸ்லாவ்ஸ்கியின் வார்த்தைகளில் சொல்வதானால், 'பாதங்க ளில் ஒட்டியிருக்கிற சகதியுடன் எப்போதும் அரங்கிற்குள் வராதீர்கள். தூசியையும் அழுக்கையும் அரங்கிற்கு வெளியேயே விட்டுவிடுங்கள். உங்களின் சிறுசிறு நச்சரிப்புகளையும், குழப்பங்களை யும், சின்னச் சின்னச் சிக்கல்களையும், உங்களின் வாழ்க்கையைப் பாதித்துக் கலைத் தேட்டத்தி லிருந்து உங்களைத் திசை மாற்றுகிற அனைத்தையும், கதவுக்கு வெளியே மாட்டுகிற கொக்கிக ளில் உங்கள் ஆடைகளுடன் மாட்டி வைத்துவிடுங்கள். மேடையில் நாம் ஏறுகிறபோது, நமக்குள் ளிருக்கும், ஒரு மனிதனின் ஒரு வாழ்க்கையோடு மட்டுமே மேடை ஏறுகிறோம். ஆயின், அரங்கு உருவாக்கும் இந்த வாழ்க்கை, பல்வேறு பகுதிகளாகப் பிரிந்து, பல்வேறு உயிர்களாக மறுவுயிர் ப்பு செய்யப்பட்டு, இந்த உலகில் பலப்பல அலைவரிசையாய் அது பரந்து விரிகிறது. அதன்பய னாய் உருவாகும் அந்த வாழ்க்கை, உயிர் பெற்று, மேடையில் வளர்ந்து, மற்றவர்களுக்கும் அந்த மணத்தைப் பரப்புகிற பெருந்திறனைக் கொண்டிருக்கிறது.

நாடக ஆசியர்களாக, நாடக நெறியாளுநர்களாக, நடிகர்களாக, காட்சி வடிவமைப்பாளர்களாக, கவிஞர்களாக, இசைஞர்களாக, ஆட்டக் கோர்ப்பாளர்களாக, தொழில் நுணுக்கர்களாக, நாமனை வரும் எந்த விலக்குமின்றி, நாடக உலகத்திற்குள் நாம் என்ன செய்கிறோமென்றால், மேடை ஏறு வதற்கு முன், நாம் பெற்றிராத ஒரு வாழ்க்கையை, அங்கு உருவாக்கிக் கொண்டிருக்கிறோம் என்ப துதான்!

மேடையில் நாம் நடிப்பது என்பது, வாழ்க்கையின் செயற்பாடுதான் என்றும் இருட்டில் சிமிட்டுகிற தீப்பொறிபோல், இரவின் இருளுக்கு ஒளியூட்டி, அதன் குளுமையைக் கதகதப்பால் தணிப்பதைப் போல், இருண்மையிலிருந்தே அது தன் சக்தியைப் பெறுகிறது என்றும் நான் சொல்லுகிறபோது, நான் எதையுமே மிகைப்படுத்திச் சொல்லவில்லை. நாம் மட்டுமே அதன் பிரகாசிப்பிற்கு உயிர் கொடுக்கிறோம். நாம் மட்டுமே அதற்குக் காட்சிவடிவம் கொடுக்கிறோம். நாம் மட்டுமே அதை வீறுள்ளதாகவும் அர்த்தமுள்ளதாகவும் ஆக்குகிறோம். கூடவும், நாம் மட்டுமே அது புரிந்துகொள்ள ப்பட வேண்டிய காரணங்களைத் தருகிறோம். நாம் மட்டுமே அறியாமை மற்றும் வெறியூட்டல் ஆகிய இருட்டுக்கு எதிராகக் கலையின் ஒளியைப் பயன்படுத்துகிறோம்.நாம் மட்டுமே, வாழ்க்கை யின் தத்துவத்தை ஆரத்தழுவி, அந்த வாழ்க்கையை இந்த உலகத்தில் பரப்ப முன்நிற்கிறோம். இத ற்காக, உண்மையின், நன்மையின், அழகுத்தன்மையின்

மதிப்பீடுகளைப் பாதுகாத்தும், வாழ்க்கை என்பது வாழ்வதற்கான தகுதியுடையது என்பதை உண்மையாக நம்பியும், நம் உழைப்பை, நேர த்தை, வியர்வையை, கண்ணீரை, குருதியை, நாளங்களை, நாம் செய்கிற ஒவ்வொன்றையும், பர ணில் கிடத்தியிருக்கிற இந்தச் செய்தியை நிறைவேற்றுவதற்காகவே, உடலளவிலும் மனதளவி லும் முயற்சித்துக் கொண்டிருக்கிறோம்.

இன்று உங்களிடம் பேசிக்கொண்டிருப்பது, பேச வேண்டும் என்பதற்காகவோ, அல்லது எல்லாக் கலைகளுக்கும் தந்தையாய் விளங்கக்கூடிய நாடகக் கலையை, உலக நாடக நாளில் கொண்டாடு வதற்காகவோ அல்ல. அதைவிடவும், நம்முடைய நாடகங்களின் பல படிநிலைகள் நமக்குப் பழக் கப்பட்டிருப்பதால், மனித குலத்தின் இழந்த சாரத்தை உங்களுக்குள் கண்டடைவதற்கு நம்மிடமிரு ந்து வெளிவரும் வார்த்தைகள், மொத்த உலகின் மனச்சாட்சியைத் தட்டி எழுப்புவதாகவும், ஒருவர் கைகளை ஒருவர் பற்றிக்கொண்டு, ஒருவர் தோள்களை ஒருவர் உரசிக் கொண்டு, பெருங்குரலெ டுத்துக் கூக்குரலிட்டு, உலகின் கவனத்தை ஈர்க்க, நாம் அனைவரும் ஒன்றுபட்டு நிற்க, நான் உங் களை அழைக்கிறேன். உங்கள் அனைவரையுமே! குரூரம், இனவாதம், இரத்த மோதல், ஒருபக்கச் சார்பான சிந்தனை மற்றும் வெறித்தனம் ஆகியவற்றின் படிமத்தைத் தூக்கி எறிந்து, அந்த இடத் தில், சுதந்திரம், சகிப்புத்தன்மை, நேசிப்பு, கருணை, அன்பு, மனிதனை ஏற்றுக் கொள்ளுதல் ஆகியவற்றால் நிரப்புவோம். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக, இந்த வானத்தின் கீழே, இந்த பூமியின்மேலே நடந்துவந்திருக்கிற மனிதகுலம் இனியும் தொடர்ந்து இந்தப் பூமியில் நடக்கவே ண்டியது இருக்கிறது. ஆகவே, நடிகரை அழைத்து, அவரின் பாதங்களை புழுதி நிறைந்த போர் களிலிருந்தும், இரத்த மோதல்களிலிருந்தும் வெளியில் எடுத்து, மேடைக் கதவுகளின் வெளியே அவற்றை வைத்துவிடச்சொல்லுங்கள். சந்தேக மூட்டத்திலிருக்கிற நம் மனிதகுலம், மறுபடியும் முறையான வெளிப்படைத் தெளிவுடன், நாம் அனைவரும் உண்மையில் தகுதி பெற்ற மனிதர்கள், நாமனைவரும் சகோதரர்கள் என்று நிச்சயம் பெருமை கொள்வோம்.

முதல் நடிகனின் முதல் மேடையின் முதல் தோற்றத்திலிருந்து, மகிழ்வின் வெளிச்சத்தை ஏந்தியிரு க்கிற நாடக ஆசிரியர்களாகிய நம்முடைய பணியின் செயற்பாடு, அசிங்கமான, இரத்தம் தோய் ந்த, மனிதத் தன்மையற்ற அனைத்தையும் முன்னணியில் நின்று எப்பொழுதும் எதிர்த்தே வந்திருக் கிறது. எல்லோரையும்விட நாடகத்தின்மூலம் வாழ்க்கைக்கு உயிரூட்டும் திறன் பெற்றவர்களாயி ருக்கிற நாமும், அழகைக்கொண்டும், மனச்சுத்தம் கொண்டும், மனிதத்துவத்தைக் கொண்டும் அவ ற்றை இப்போதும் எதிர்ப்போம்.

ஆங்கில மொழிபெயர்ப்பு: ஹெஸ்ஸா அல்ஃபலாசி, UAE/ Fujairah
ஆங்கிலத்திலிருந்து தமிழில்: மு.இராமசுவாமி, நிஜநாடக இயக்கம்.